செய்தி வெளியீடு எண். 808 நாள்.7.11.2009

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 9.11.2009 (திங்கட்கிழமை) அன்று வேலூர் மாவட்டத்தில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 9.11.2009 (திங்கட்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு, வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சந்திரபுரம் ஊராட்சியில் , பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்து வைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கி, காவலர் குடியிருப்புகள், புதிய கட்டடங்கள் திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா பேருரையாற்றவுள்ளார்கள்.

முன்னதாக, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்ற உள்ளார்கள்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் தலைமையுரையாற்ற உள்ளார்கள்.

மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், காவல்துறை இயக்குநர் திரு.கே.பி.ஜெயின், இ.கா.ப. ஆகியோர் முன்னிலையுரையாற்ற உள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.து.ராஜா, திரு.த.வேணுகோபால், திரு.எம்.அப்துல் ரகுமான், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.காந்தி, திரு.கு.பாண்டுரங்கன், திரு.சி.ஞானசேகரன், திரு.என்.கே.ஆர்.சூரியகுமார், திரு.அ.சின்னசாமி, திரு.டி.கே.ராஜா, திரு.அப்துல் பாசித், திரு.அருள் அன்பரசு, திரு.மு.ஜெகன்மூர்த்தி, திரு.கே.எல்.இளவழகன், திருமதி.ஜி.லதா, திரு.பெ.சு.விஜயகுமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஷீலாராஜன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு.ஆர்.கிருபாகரன், சந்திரபுரம் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.சுமதி அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

இவ்விழாவில், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) திரு.கே.ராதாகிருஷ்ணன், இ.கா.ப.. வடக்கு மண்டல காவல்துறைத் தலைவர் திரு.அஷிஸ் பெங்கரா, இ.கா.ப., நாடாளுமன்ற–சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.நா.அருள்ஜோதிஅரசன் நன்றியுரையாற்ற உள்ளார்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைலர் திரு.செ.ராஜேந்திரன்,இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.